பொருளடக்கம்

*

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16

அணிந்துரை / 21

1 முன்னுரை / 25

2 நான்கு அடிப்படைகள் / 28

முதலாவது அடிப்படை விதியும் விதிவிலக்கும் / 28

இரண்டாவது அடிப்படை இபாதாத், ஆதாத் இரண்டிற்குமுள்ள வேறுபாடுகள் / 29

மூன்றாவது அடிப்படை முகம் மூடும் சட்டம் வணக்கமாக்கப்பட்ட ஆண்டு / 30

நான்காவது அடிப்படை முகம் திறக்க அனுமதிக்கப்பட்ட பெண்கள் / 31

3 நிகாப் எனும் முகத்தை மறைக்கும் ஆடை இஸ்லாமில் உண்டா? / 33

4 கறுப்பு நிற ஆடை அணியலாமா? / 36

5 முகம் மூடுவதற்குரிய ஆதாரங்கள் / 38

1. குர்ஆனிலிருந்து ஆதாரங்கள் / 38

மறுப்போரின் விமர்சனங்களும் பதில்களும் / 43

2. முகம் மூடுதல் குறித்த ஹதீஸ் ஆதாரங்கள் / 45

3. பகுத்தறிவுரீதியான ஆதாரங்கள் / 50

6 சந்தேகங்களும் விளக்கங்களும் / 52

முகத்தைத் திறக்க வேண்டுமென்று கூறக்கூடியவர்களின் ஆதாரங்களுக்கான மறுப்புகள் / 52

7 ஹிஜாப் எனும் சட்டம் நபி ﷺ அவர்களின் மனைவிமார்களுக்கு மாத்திரமா? / 83

8 தவறாக புரியப்பட்ட ஸூறா அஹ்ஸாபின் 59ஆம் வசனமும் அதற்கான தெளிவும் / 94

9 முகத்தை மூடுவது ஹறாம் என முதலில் கூறியவர்கள் / 101

10 முகம் மூடுவதின் சட்டம் / 104

11 முகம் மூடும் கலாச்சாரம் சவூதி அரேபிய இறக்குமதியா? / 106

12 ஹிஜாபுக்கு எதிரான கோஷம் எப்போது, எங்கே ஆரம்பமானது? / 108

13 நான்கு மத்ஹபுகளின் கருத்துகள் / 110

14 முக்கியக் குறிப்புகள் / 116

15 முடிவுரை / 118

உதவிய நூல்கள் / 120

2

நான்கு அடிப்படைகள்

*

முதலில் நாம் முக்கியமான நான்கு அடிப்படைகளை தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றுடன் ஹிஜாப் சம்பந்தமான ஆதாரங்களை உரசிப் பார்த்தால், அது சம்பந்தமான தெளிவான ஒரு முடிவுக்கு இலகுவாக வரலாம். அவை:

முதலாவது அடிப்படை
விதியும் விதிவிலக்கும்

ஒரு மூஃமினைப் பொருத்தவரை அல்லாஹ்வும் அவனது தூதர் ﷺ அவர்களும் ஒரு செய்தியைச் சொன்னால், அதனை மறுக்காமல் ஏற்றுக்கொள்வது ஒரு வணக்கமாகும். அது சாத்தியமானதா அல்லது அசாத்தியமானதா என்பதையெல்லாம் ஒரு விசுவாசி சிந்திக்கக் கூடாது. அதே போன்று நமது வாழ்வில் அதனை நடைமுறைபடுத்தக்கூடிய சூழல் இல்லாவிடில் நாம் அதை மறுப்பது அல்லது அதற்கு வேறு காரணங்கள் கூறி மக்களைத் திசை திருப்புவது போன்ற பண்புகள் ஒரு விசுவாசியிடம் இருக்கவே கூடாது. அல்குர்ஆனில் சொல்லப்பட்ட சட்டதிட்டங்கள் அனைத்தையும் அந்நிய நாடுகளில் வாழக்கூடிய மக்கள் நடைமுறைப்படுத்துவது சில சந்தர்ப்பங்களில் சிரமமாக இருக்கும். அப்படியான சூழலில் குறித்த விசயத்தை நாம் நடைமுறைப்படுத்தாவிட்டாலும் நம்மீது குற்மில்லை என்பதைப் பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகிறது.

لَا يُكَلِّفُ اللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا

‘எந்த ஓர் ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் அல்லாஹ் சிரமப்படுத்தமாட்டான்.’ (குர்ஆன் 2:286)

3

நிகாப் எனும் முகத்தை மறைக்கும் ஆடை இஸ்லாமில் உண்டா?

*

சிலருக்கு முகமூடி என்றோர் ஆடை இஸ்லாமில் இருக்கிறதா? ஏன் இதனைச் சிலர் ஹராமென்று கூறுகின்றனர்? என்ற சந்தேகம் எழுகின்றது. உண்மையிலேயே முகமூடி என்றோர் ஆடைமுறை இஸ்லாமில் உள்ளது என்பதைப் பின்வரும் இரு ஆதாரங்களும் நிரூபிக்கின்றன.

முதலாவது ஆதாரம்

ஆயிஷா ﵂ அவர்கள் பனுல் மூஸ்தலக் எனும் யுத்தத்திற்கு நபி ﷺ அவர்களுடன் சென்றார்கள். இது ஹிஜ்ரீ 6ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது ஃபர்தாவின் சட்டம் கடமையாக்கப்பட்டிருந்தது. இச்சம்பவத்தில் ஆயிஷா ﵂ அவர்கள் தாம் தொலைத்த ஒரு மாலையைத் தேடச் சென்றுவிட்டுத் திரும்பிவந்து பார்த்தபோது படையினர் அவர்களை விட்டு விட்டுச் சென்றிருந்தனர். அவர்கள் தன்னைத் தேடி திரும்பி வருவார்கள் என்ற எண்ணத்தில் அந்த இடத்திலேயே காத்துக் கொண்டிருந்தார்கள். ஆயிஷா ﵂ அவர்கள் கூறுகிறார்கள்:

فَأَصْبَحَ عِنْدَ مَنْزِلِي فَرَأَى سَوَادَ إِنْسَانٍ نَائِمٍ فَعَرَفَنِي حِينَ رَآنِي ، وَكَانَ رَآنِي قَبْلَ الْحِجَابِ فَاسْتَيْقَظْتُ بِاسْتِرْجَاعِهِ حِينَ عَرَفَنِي فَخَمَّرْتُ وَجْهِي بِجِلْبَابِي

‘நான் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் ஸஃப்வான் இப்னு முஅத்தல் என்ற நபித்தோழர் காலையில் வந்தார். அவர் (அங்கே) தூங்கிக் கொண்டிருந்த ஒரு கறுப்பு உருவத்தைப் பார்த்தார். பர்தாவுடைய சட்டம் அருளப்படுவதற்கு முன்னர் அவர் என்னைப் பார்த்திருந்தார். எனவே, என்னைப் பார்த்ததும் அவர் அடையாளம் புரிந்து கொண்டார். அவர்,

4

கறுப்பு நிற ஆடை அணியலாமா?

*

சிலருக்கு பெண்கள் கறுப்பு நிறத்தில் அணிவதைக்கூட தாங்க முடியவில்லை. கறுப்பு நிறம் மூலமாக நோய்கள் வருவதாகவும் இன்னும் சில காரணங்களையும் அதற்குக் கூறுகின்றனர்.

இந்தக் கறுப்பு நிற ஆடை ஸஹாபிப் பெண்கள் மத்தியில் அணியப்பட்டிருக்கின்றது என்பதற்குப் பின்வரும் இரண்டு ஆதாரங்களைக் குறிப்பிடலாம்.

முதலாவது ஆதாரம்

மேலே குறிப்பிடப்பட்ட ஹதீஸில் ஆயிஷா ﵂ அவர்கள், தன்னை ஸஃப்வான் ﵁ அவர்கள் கண்டதைக் கூறும்போது, 'கறுப்பு உருவத்தைக் கண்டார்கள்' எனக் கூறுகிறார்கள். இதற்கு இருளில் அவர்களைக் கண்டிருக்கலாம் என்றும் மறுப்புச் சொல்ல முடியாது. காரணம், அங்குக் காலையில் வந்தார்கள், கறுப்பு உருவத்தைக் கண்டார்கள் என்று சொல்லப் படுகின்றது. எனவே, கறுப்பு நிறத்தில் அப்படியோர் ஆடை அணிந்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் ஆதாரம்.

இரண்டாவது ஆதாரம்

உம்மு சலமா ﵂ அவர்கள் கூறுகிறார்கள்:

لَمَّا نَزَلَتْ : {يُدْنِينَ عَلَيْهِنَّ مِنْ جَلاَبِيبِهِنَّ}: ، خَرَجَ نِسَاءُ الأَنْصَارِ كَأَنَّ عَلَى رُءُوسِهِنَّ الْغِرْبَانَ مِنَ الأَكْسِيَةِ

அஹ்ஸாப் அத்தியாயத்தில் 'உங்களது மேலாடைகளின் ஒரு பகுதியை நீங்கள் உங்களுக்கு முன்னால் போட்டுக் கொள்ளுங்கள்' என்ற வசனம் இறங்கிய பின்பு அன்ஸாரிப் பெண்மணிகளின் ஆடைகளினால் அவர்களது தலைகளில்

5

முகம் மூடுவதற்குரிய ஆதாரங்கள்

*

முகம் மூடுவதற்கு குர்ஆனிலிருந்தும் ஹதீஸிலிருந்தும் பகுத் தறிவுரீதியாகவும் பல்வேறு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

1. குர்ஆனிலிருந்து ஆதாரங்கள்

1. அல்லாஹ் தனது திருமறையில் பின்வருமாறு கூறுகிறான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَدْخُلُوا بُيُوتَ النَّبِيِّ إِلَّا أَنْ يُؤْذَنَ لَكُمْ إِلَى طَعَامٍ غَيْرَ نَاظِرِينَ إِنَاهُ وَلَكِنْ إِذَا دُعِيتُمْ فَادْخُلُوا فَإِذَا طَعِمْتُمْ فَانْتَشِرُوا وَلَا مُسْتَأْنِسِينَ لِحَدِيثٍ إِنَّ ذَلِكُمْ كَانَ يُؤْذِي النَّبِيَّ فَيَسْتَحْيِي مِنْكُمْ وَاللَّهُ لَا يَسْتَحْيِي مِنَ الْحَقِّ وَإِذَا سَأَلْتُمُوهُنَّ مَتَاعًا فَاسْأَلُوهُنَّ مِنْ وَرَاءِ حِجَابٍ ذَلِكُمْ أَطْهَرُ لِقُلُوبِكُمْ وَقُلُوبِهِنَّ وَمَا كَانَ لَكُمْ أَنْ تُؤْذُوا رَسُولَ اللَّهِ وَلَا أَنْ تَنْكِحُوا أَزْوَاجَهُ مِنْ بَعْدِهِ أَبَدًا إِنَّ ذَلِكُمْ كَانَ عِنْدَ اللَّهِ عَظِيمًا

‘நம்பிக்கை கொண்டோரே! உணவுக்காக உங்களுக்கு அனு மதி அளிக்கப்பட்டாலேயன்றி நீங்கள் நபியின் வீடுகளில் நுழைய வேண்டாம். அது தயாராவதை எதிர்பார்த்தவராக இருக்க வேண்டாம். எனினும், நீங்கள் அழைக்கப்பட்டால் அப்போது நுழையுங்கள். நீங்கள் உணவு உட்கொண் டால் கலைந்து செல்லுங்கள். பேச்சில் ஈடுபட்டுக் கொண்டி ருக்காதீர்கள். நிச்சயமாக இது நபிக்கு தொல்லையளிக்கும். இதனை அவர் உங்களிடம் (கூற) வெட்கப்படுவார். அல் லாஹ் சத்தியத்தைக் கூற வெட்கப்பட மாட்டான். (நபியின் மனைவியர்களான) அவர்களிடம் ஏதேனும் ஒரு பொருளை நீங்கள் கேட்பதாயின் திரைக்கு அப்பால் இருந்தே அவர்களி டம் கேளுங்கள். இதுதான் உங்கள் உள்ளங்களுக்கும் அவர்களின் உள்ளங்களுக்கும் மிகத் தூய்மையானதாகும்.

6

சந்தேகங்களும் விளக்கங்களும்

*

முகத்தைத் திறக்க வேண்டுமென்று கூறக்கூடியவர்களின் ஆதாரங்களுக்கான மறுப்புகள்

முகம் மூடுவதற்குக் குர்ஆனிலிருந்தும், ஹதீஸிலிருந்தும் ஆதாரங்களை முன்வைக்கும் போது முகத்தை மூடுவதன் மூலம் சில பாதிப்புகள் இருக்கின்றன என, சில சந்தேகங்களைக் கிளப்புகிறார்கள். அல்லாஹ்வும் அவனது தூதர் ﷺ அவர்களுமே இக்கட்டளையைப் பிறப்பித்திருக்கின்றார்கள். அந்த சந்தேகங்களைக் கிளப்பக்கூடியவர்கள் முஸ்லிம்களாகவும் அல்லது காஃபிர்களாகவும் இருக்கலாம்.

இதில் காஃபிர்கள் சந்தேகங்களைக் கிளப்பும்போது அதை நாம் பொருட்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. காரணம், நமது மார்க்கச் சட்டங்களை உதாசீனம் செய்ய வேண்டுமென்பதற்காக அவர்கள் இவ்வாறு செய்யலாம். நமக்கு அவர்களது சந்தேகங்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்பது கட்டாயக் கடமை கிடையாது. அவர்களுக்குப் பதில் சொல்லத் தெரியாது என்பதற்காக நமது குர்ஆன், ஹதீஸில் சொல்லப்பட்ட சட்டதிட்டங்களை எடுத்து வீசுவதும் கிடையாது. எனவே, காஃபிர்கள் இதுபற்றி ஏதும் சொல்லியிருந்தால் நாம் அதை பொருட்படுத்தத் தேவையில்லை.

அடுத்து சந்தேகம் கிளப்பக்கூடியவர் ஒரு முஸ்லிமாக இருக்கலாம். அல்லாஹ்வும் அவனது தூதர் ﷺ அவர்களும் சொல்லிய விசயத்தில் ஓர் முஸ்லிமுக்கு சந்தேகம் வந்துவிட்டால் அவரைத்தான் முதலில் பரிசீலனை செய்ய வேண்டும். குர்ஆன் மற்றும் ஹதீஸில் சந்தேகங்களைக் கிளப்பக்கூடிய வரை நாம் ஆய்வுசெய்ய கடமைப்பட்டுள்ளோம். அவர்களது

7

ஹிஜாப் எனும் சட்டம் நபி ﷺ அவர்களின் மனைவிமார்களுக்கு மாத்திரமா?

*

இப்போது நாம் முகத்தை மறைக்கத் தேவையில்லை என்று கூறுபவர்களின் சந்தேகங்களுக்கான பதில்களைப் பார்த்தோம். அடுத்ததாக அவர்கள் இன்னுமொரு சந்தேகத்தை முன்வைப்பார்கள். 'இது நபியவர்களின் மனைவிமார்களுக்கு உரிய சட்டம்; ஏனைய பெண்களுக்கு இச்சட்டம் கிடையாது' என்ற கருத்தைச் சொல்கிறார்கள். இதற்கு அவர்கள் சான்றாக வைக்கும் ஆதாரம், அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَدْخُلُوا بُيُوتَ النَّبِيِّ إِلَّا أَنْ يُؤْذَنَ لَكُمْ إِلَى طَعَامٍ غَيْرَ نَاظِرِينَ إِنَاهُ وَلَكِنْ إِذَا دُعِيتُمْ فَادْخُلُوا فَإِذَا طَعِمْتُمْ فَانْتَشِرُوا وَلَا مُسْتَأْنِسِينَ لِحَدِيثٍ إِنَّ ذَلِكُمْ كَانَ يُؤْذِي النَّبِيَّ فَيَسْتَحْيِي مِنْكُمْ وَاللَّهُ لَا يَسْتَحْيِي مِنَ الْحَقِّ وَإِذَا سَأَلْتُمُوهُنَّ مَتَاعًا فَاسْأَلُوهُنَّ مِنْ وَرَاءِ حِجَابٍ ذَلِكُمْ أَطْهَرُ لِقُلُوبِكُمْ وَقُلُوبِهِنَّ وَمَا كَانَ لَكُمْ أَنْ تُؤْذُوا رَسُولَ اللَّهِ وَلَا أَنْ تَنْكِحُوا أَزْوَاجَهُ مِنْ بَعْدِهِ أَبَدًا إِنَّ ذَلِكُمْ كَانَ عِنْدَ اللَّهِ عَظِيمًا

'நம்பிக்கை கொண்டோரே! உணவுக்காக உங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டாலேயன்றி நீங்கள் நபியின் வீடுகளில் நுழைய வேண்டாம். அது தயாராவதை எதிர்பார்த்தவராக இருக்க வேண்டாம். எனினும், நீங்கள் அழைக்கப்பட்டால் அப்போது நுழையுங்கள். நீங்கள் உணவு உட்கொண்டால் கலைந்து செல்லுங்கள். பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருக்காதீர்கள். நிச்சயமாக இது நபிக்குத் தொல்லை தரும். இதனை அவர் உங்களிடம் (கூற) வெட்கப்படுவார். அல்லாஹ் சத்தியத்தைக் கூற வெட்கப்படமாட்டான். (நபியின்

13

நான்கு மத்ஹபுகளின் கருத்துகள்

*

சிலர் பெரும்பான்மையான அறிஞர்கள் மற்றும் மத்ஹபுகள்[8] முகம் திறப்பதையே வலுவான கருத்தாகக் கருதுகின்றனர் என்பதாகப் பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால், இது உண்மைக்குப் புறம்பான தகவலாகும். அதனை நிரூபிக்கும் மத்ஹபு அறிஞர்களின் கருத்துகளைச் சுருக்கமாகக் கீழே தந்துள்ளோம்.

ஹனஃபி மத்ஹபைச் சார்ந்த உலமாக்களின் கருத்துகள்

1. அபூ பக்ர் அல்ஜஸ்ஸாஸ் ؒ: ஒரு வாலிபப் பெண் தன்னுடைய முகத்தை அந்நிய ஆண்களிடம் மறைக்குமாறு ஏவப்பட்டிருக்கிறாள். (அஹ்காமுல் குர்ஆன் *(3/458)*

2. இமாம் சரக்ஸி ؒ: குழப்பம் ஏற்படும் என்ற அச்சமுள்ள சந்தர்ப்பத்தில் முகத்தைப் பார்ப்பது ஹறாம். ஆனால், பிரச்சினை ஏற்படுவதே முகத்தைப் பார்ப்பதில் தான் என்பதே யதார்த்தமாகும். ஒரு பெண்ணின் பெரும்பாலான அழகு ஏனைய பகுதிகளை விட முகத்தில்தான் காணப்படுகிறது.

3. அலாஉத்தீன் ؒ: அந்நிய ஆண்கள் மத்தியில் தன்னுடைய முகத்தைக் காட்டுவதை விட்டும் ஒரு பெண் தடுக்கப்படுகிறாள். (அல் மப்சூத் *10/153)*

8 மத்ஹபு (مَذْهَب): அகராதிப்படி வழி, கொள்கை. வழக்கத்தில் இஸ்லாமியச் சட்டங்களை விளக்க உருவான கல்விப் பிரிவுகளின் பெயர். ஹனஃபீ, ஷாஃபிஈ, ஹன்பலீ, மாலிகி பிரபலமானவை. இவை வரிசை முறையில் இமாம்கள் அபூஹனீஃபா, ஷாஃபிஈ, அஹ்மது இப்னு ஹன்பல், மாலிக் இப்னு அனஸ் ؒ ஆகியோரின் பெயரில் உருவாயின.